விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 226 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 16 வியாழக்கிழமை (01.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# சுதந்திரமான தேர்தலுக்கு ஜனாதிபதியே பொறுப்பு




## வேட்பாளர் என்பதனால் பொறுப்பிலிருந்து விலக முடியாது தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தலை நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு காணப் படுகிறது.

வேட்பாளர் என்ற காரணத்தால் அவரால் அந்தப் பொறுப்பில் இருந்து விலக முடியாது எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)



## ஜனாதிபதிக்கு எதிராக தேர்தல் முறைப்பாடு

14 ஆம் பக்கம் பார்க்க

## காணி, பொலிஸ் அதிகாரம் வழங்க முடியாது

- நாமல் ராஜபக்ஷ



03 ஆம் பக்கம் பார்க்க

## பெரமுன வேட்பாளர் அறிவிப்பதில் தாமதம்

03 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு நேற்று அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்து இதனை அறிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கட்சியின் யோசனைகளை ஜனாதிபதிக்கு வழங்கிய பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் மேற் கொள்ளப்பட

15

## யாழ்ப்பாணத்தில் கொள்ளைகளில் ஈடுபடுபவர்களின் காணொளி வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்ற திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்ற நபர்கள் தொடர்பாக சிசிடிவி கண்காணிப்பு கமரா காணொளிகளை வெளியிட்டுள்ள பொலிஸார் அதில் உள்ள நபர்கள் தொடர்பாக பொது மக்கள் யாருக்கேனும் தகவல் தெரிந்தால் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

அவ்வாறு தகவல் தருபவர்களுக்கு தக்க சன்மானம் வழங்கப்படும் என யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சூரிய பண்டார கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், கொக்குவில், மானிப்

15

## வடமராட்சியில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

வடமராட்சியில் விபரீத முடிவெடுத்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் குளவியடி அம்மன் வீதி, கரண

15

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 116 மாகாண சபை உறுப்பினர்கள் ரணிலுக்கு ஆதரவளிப்பதாக உறுதி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்கள் 116 பேர் கொண்ட குழு நேற்று கூடி தீர்மானித்துள்ளது.

ஜனாதிபதியின் வெற்றிக்கு ஆதரவளிப்பதாக அந்தக் குழுவினர் உறுதியளித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

116 பேர் கொண்ட இந்தக் குழு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## புன்னாலைக்கட்டுவனில் ஓய்வுநிலை அதிபர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவனில் தனியாக வீட்டில் வசித்து வந்த ஓய்வு

15

## வவுனிக்குளத்தில் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன்

- கழுத்து நெரித்துப் படுகொலை
- உடற்கூற்று பரிசோதனையில் தகவல்

(முல்லைத்தீவு)


வவுனிக்குளத்திலிருந்து நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு யோகபுரம் மல்லாவி

15

## பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததற்கு குடும்ப ஆட்சியே காரணம்

### ஜே.வி.பி.தலைவர் அநுர



(கொழும்பு)

"நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த குடும்ப அரசியல் காரணமாகவே நாட்டு மக்கள் இந்த பாரிய பொருளாதார வீழ்ச்சியை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக" தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்றின்றி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஜனாதிபதித் தேர்தலுக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் நடவடிக்கைகளுக்கு முழுமையான பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ .எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, தேர்தலுக்கான பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக தற்போது தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எதிர்வரும் 14 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்துவதற்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றது. தபால் மூல வாக்களிப்புக்கான பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் எதிர்வரும் 3 ஆம் திகதி நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தெரிவத்தாட்சி அதிகாரிகளும் உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவுறுத்தல்களை வழங்கும் பொருட்டு ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர் இவ்வாறு ஆர். எம். ஏ .எல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)

# யாழில் நடிகை ரம்பா



(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய பிரபல நடிகை ரம்பா மீண்டும் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக, தனியார் விமானம் ஒன்றில் தனது குடும்பத்தினருடன் அவர் வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்தப்படுகின்ற விழா ஒன்றில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.(ம-7)

# ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் 50 ஆயிரம் பட்டதாரிகளுக்குத் தீர்வு

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

வேலையின்மையால் பாதிக்கப்பட்ட சுமார் 50 ஆயிரம் பட்டதாரிகள் விரக்தியில் இருப்பதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் அவர்களுக்கான தீர்வு வழங்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற வேலையில்லா பட்டதாரிகளுடனான கலந்துரையாடலின் போதே இதனைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பை வழங்குவதுடன் தொழில்முனைவோராக மாற்றுவதற்கான பல்வேறு வாய்ப்புகளையும் வழங்குவதே தனது நோக்கமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரச நிர்வாகத்தை டிஜிட்டல் மயமாக்குவதன் மூலம் அச்செயற்பாடுகளில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும் என குறிப்பிட்ட அவர், அதற்கு மேலதிகமாக தகவல் தொழில் நுட்ப பூங்காக்கள் ஆரம்பிக்கப்பட்டு, அதனூடாக தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உறுதியளித்தார். (ம-7)

# தேர்தலில் எப்படி செயற்படுவது அரச அதிகாரிகளுக்கு வழிகாட்டல் கோவை

ஜனாதிபதி தேர்தலின் போது அரச அதிகாரிகள் மற்றும் அரச செயற்பாடுகள் தொடர்பான வழிகாட்டல் கோவையை வெளியிட மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அரச அதிகாரிகளின் பக்கச்சார்பான நடவடிக்கைகளால், பொதுமக்களின் உரிமைகள் மீறப்படுவதாக மனித உரிமைகள் ஆணையாளர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பில் ஆராய்ந்து வழிகாட்டுதல் கோவை தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.(ம-7)


வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு (அருள் கல்வி வட்டம்) G.C.E(O/L) க.பொ.த(சா/த) முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2024

மாற்றியமைக்கப்பட்ட நேர அட்டவணை

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 16.08.2024 (வெள்ளி) | வவுனியா கந்தசுவாமி ஆலய மண்டபம் | மு.ப 8.00 பி.ப 2.00 |
| 17.08.2024 (சனி) | ஊர்காவற்றுறை பிரதேச செயலக மண்டபம் | மு.ப 8.30 பி.ப 2.00 |
| 18.08.2024 (ஞாயிறு) | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி | மு.ப 8.30 பி.ப 2.00 |
| 19.08.2024 (திங்கள்) | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00 பி.ப 2.00 |
| 20.08.2024 (செவ்வாய்) | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00 பி.ப 2.00 |
| 21.08.2024 (புதன்) | செல்வநாயகம் மண்டபம் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 7.00 பி.ப 2.00 |

Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
G.C.E (O/L) கடந்த கால வினாவிடைத் தொகுப்புப் புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.
"அனைவரும் கலந்துகொண்டு பயன் பெறவும்"

குறிப்பு:
மாணவர்கள் சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.

(C-900)

செயலமர்வின் அமைப்பாளர்கள்
1) தலைவர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் -இலங்கை திரு.வே.தேவசேனாதிபதி (சிரேஷ்ட சட்டத்தரணி) LLB 077 1133 400
2) பொதுச்செயலாளர் கல்வி அபிவிருத்தி ஆலோசனை அமையம் - இலங்கை திரு.கந்தசாமி சக்திதரன் 077 070 3360
3) திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) 077 3144 527
(4) திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை 077 3850 841

இணை அனுசரணை கல்விக் காருணியன்
ESP நாகரட்ணம் (கஜமுகன் ஹாட்வெயர்)
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 2833



அபிவிருத்தி லொத்தர் சபை, தேசிய லொத்தர் சபை
வேலையாட்கள் தேவை

யாழ் கனகலிங்கம் திலகவதி NLB, DLB முகவர் ஊடாக லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யக்கூடிய ஆண்கள் தேவை. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். முன் அனுபவம் கவனத்திற் கொள்ளப்படும்.
குறிப்பு : 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு : 077 603 1723

(1598)



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தனங்கிளப்பு பகுதியில் 112 பரப்புக் காணியில் 24 பரப்பு காணி மட்டுமே விற்பனைக்கு உள்ளது.

நிலப்பரப்பு

- A32 பிரதான வீதியில் இருந்து 50 மீற்றர் (2 ஆவது காணி)
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 5½ இலட்சம் (550,000/=)
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : (காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை)

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389
077 986 5457

(1597)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் வழங்க முடியாது

## நாமல் ராஜபக்ஷ உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

**அரசியல் அமைப்பின் 13 ஆம் திருத்தச் சட்டத்தின் கீழ் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு தமது கட்சி எதிர்ப்பை வெளியிடுவதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



நேர்காணல் ஒன்றில் பங்கேற்றபோதே அவர் இந்த விடயத்தை குறிப் பிட்டுள்ளார்.

சில தரப்பினரைப் போன்று வடக்கில் ஒன் றையும் தெற்கில் ஒன் றையும் நாங்கள் பேசப் போவதில்லை இதனால் வடக்கின் சில அரசியல் கட்சிகளினால் எம்முடன் இணைந்து செயற்பட முடியவில்லை. வடக்கின் ஒரு தொகுதி இளைஞர்கள் தற் பொழுது காணி, பொலிஸ் அதிகாரம்என்ற கோரிக் கையை கைவிட்டுள்ளனர்.

இந்நிலையில், தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் தற் பொழுது தங்களுடன் இணைந்து கொண்டுள்ளனர்.

எதிர்வரும் தேர்தல் களில் வடக் கினை பிரதி நிதித்துவம் செய்து ஸ்ரீ லங்கா பொதுஜன முன் னணியின் பாராளு மன்ற உறுப்பினர் ஒரு வரை உருவாக்குவது தமது இலக்கு அவ்வாறு தெரிவாகும் பாராளு மன்ற உறுப்பினர் அமைச்ச ரவையிலும் அங்கம் வகிக் கலாம் எனவும் ஒரு காலத்தில் அவர் பிரதமராகவோ ஜனா திபதியாகவோ கூட பதவிவகிக் கலாம்.

இதேவேளை, ஸ்ரீ லங்கா பொதுஜன முன் னணியின் பிரதான எதி ராளி ஐக்கிய மக்கள் சக்தி யின் தலைவர் சஜித் பிரேமதாச என நமால் தெரிவித்துள்ளதோடு தமது கட்சியிலிருந்து விலகி வெளி யேறியவர் களை பிரதான சவாலாகவோ எதிராளி களா கவோ கருதவில்லை எனவும் நாமல் ராஜபக்சஷ குறிப்பிட்டுள்ளார். (நி-6)

## கட்டுப்பணம் செலுத்தினார் சஜித் பிரேமதாச



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ஜனா திபதித் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தப் பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தேர்ல்கள் ஆணைக் குழு வில் கட்டுப்பணம் செலுத் தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்து மபண்டார சஜித் பிரேமதாச சார்பில் தேர்தல் ஆணைக் குழு வில் நேற்று காலை கட்டுப் பணம் செலுத்தி னார். (நி-6)

# நெருக்கடிக்குள் மொட்டு வேட்பாளரை அறிவிப்பதில் தாமதம்

(கொழும்பு)

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதி பதி வேட்பாளர் நேற்று அறிவிக்கப்படவிருந்த நிலையில்,

மேலும் சில நாட்கள் தாமதமாகியுள் ளதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

கட்சிக்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை காரணமாகவே முடிவை அறிவிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக குறிப் பிடப்படுகின்றது.

இதேவேளை கட்சி யிலிருந்து விலகிச் செல் லும் மாவட்ட மற்றும் தொகுதி அமைப்பாளர் களுக்குப் பதிலாக புதிய அமைப்பாளர் களை நிய மிப்பதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளதாக அந்த கட்சியின் உள்ளக தக வல்கள் தெரிவிக்கின் றன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலை மையகத்தில் இடம் பெற் றுள்ளதாக தகவல் வெளி யாகியுள்ளது.

மேலும், தற் போதைய நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணும் வகையில் இதன்போது பல தீர்மா னங்கள் எட்டப்பட்ட தாகத் தெரிவிக்கப்படு கின்றமை குறிப்பிடத்தக் கது. (நி-6)

# மீண்டும் போராட்டத்திற்கு இடமளிக்கப்படாது -கமல்

(கொழும்பு)


நாட்டில் மீண்டும் போராட்டம் முன்னெ டுப்பதற்கு இடம ளிக் கப்படமாட்டாது என பாதுகாப்பு செய லாளர் ஜெனரல் கமல் குண ரட்ன தெரிவித்துள் ளார்.



ஜனாதிபதி தேர்தல் முடிவுகளின் அடிப் படையில் போராட்டம் வெடிக்கலாம் என சிலர் வெளியிடும் கருத்துக் களில் எவ்வித அடிப் படையும் கிடை யாது என ஜனாதிபதி ஊடக மையத்தில் நடை பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் தெரி வித்துள்ளார். (நி-6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 04 - 1930



மறைவு 30 - 07 - 2024

## யோசவ் சிங்கராயர்

(ஓய்வு நிலைப்பொறியியலாளர்)

கரம்பனை பிறப்பிடமாகவும், கீரிமலை வீதி பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட யோசவ் சிங்கராயர் 30.07.2024 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் அமரர்களான பொன்னையா - அன்னமுத்து தம்பதி களின் அன்பு மகனும் அமரர்களான நவரத்தினசிங்கம்(முன்னாள் அதிபர்)-சொர்ணம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மேரி யோசபின் மனுவெலாவின் பிரிய கணவரும் நிமோ, தர்ஷன் ஆகி யோரின் பாசமிகு தந்தையும் ஐவன் அவர்களது மாமனாரும், ரிப்பனி, கற்றினா சலோமி ஆகியோரின் பாசமிகு பாட்டனாரும் காலஞ்சென்ற வர்களான குணமணி, பயஸ், குணம், விக்டர் மற்றும் வைலற் ஆகி யோரது நேசமிகு சகோதரருமாவார். அன்னாரது பூதவுடல் 01.08.2024 வியாழக்கிழமை நல்லடக்க ஆராதனைக்காகப் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு காலை 9.00 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் பண்டத்தரிப்பிலுள்ள அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(1590)

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## நீச்சல் போட்டியில் சம்பியனான யாழ். இந்துக்கல்லூரி



வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான நீச்சல் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி பதக்கங்களை குவித்து சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான நீச்சல் போட்டி கிளிநொச்சி நீச்சல் தடாகத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான நீச்சல் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரி 33 தங்கப் பதக்கங்கள், 24 வெள்ளிப் பதக்கங்கள், 18 வெண்கல பதக்கங்கள் உட்பட 75 பதக்கங்களுடன் 275 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், நெடுந்தீவு மகா வித்தியாலயம் 62 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், தம்பாட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 52 புள்ளிகளை பெற்று மூன்றாமிடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-90)

## நடேஸ்வராக் கல்லூரிக்கு பளுதூக்கலில் 2 பதக்கங்கள்



மாகாண மட்ட பளுதூக்கல் போட்டியில் யா/நடேஸ்வராக் கல்லூரிக்கு இரண்டு பதக்கங்கள்.

20 வயதின் கீழ் 61 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொண்ட சி. குமரன் 130 கிலோ எடையினைத் தூக்கி வெள்ளிப்பதக்கம்,

67 கிலோ எடைப்பிரிவில் கலந்து கொண்ட லோ.லஜிந்தன் 165 கிலோ எடையினைத் தூக்கி தங்கப் பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

2024 ஆம் ஆண்டின் வட மகாணத்தின் சிறந்த வீரனாக யா/ நடேஸ்வராக்கல்லூரியின் லோகேந்திரராஜா லஜிந்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## வெற்றி வாகை சூடியது சுன்னாகம் ஸ்கந்தவரோதய




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதலாமிடத்தையும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அணி இரண்டாமிடத்தையும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி மூன்றாமிடத்தையும் பெற்றனர். (நி-6-90)

## தொடரை கைப்பற்றியது இந்தியா

இலங்கைக்கு எதிரான இருபது-20 தொடரை கைப்பற்றியது இந்திய அணி.

இலங்கை நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள, இந்திய அணி மூன்று போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடரில் விளையாடியது. இந்தத் தொடரின் முதல் இரண்டு போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்று, தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது. அந்த வகையில் தொடரின் மூன்றாவது மற்றும் 20 போட்டி நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது.

டாஸ் வென்ற இலங்கை அணி முதலில் பந்துவீச்சு தேர்வு செய்தது. அதன்படி பட்டிங்கை தொடங்கிய இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 137 ரன்களைமட்டுமே எடுத்தது.

இலங்கை சார்பில் மகேஷ் தீக்ஷனா 3 விக்கெட்டுகளையும் வனிண்டு ஹசரங்க 2 விக்கெட்டுக்களையும், சமிண்டு விக்கிரமசிங்கே, அசித பெர்னான்டோ மற்றும் ரமேஸ் மெண்டிஸ் தலா 1 விக்கெட் வீழ்த்தினார்.

எளிய இலக்கைத் துரத்திய இலங்கை அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 137 ரன்களைச் சேர்த்தது.

இதனால் போட்டி சமனில் முடிந்தது. சூப்பர் ஓவர் கொண்டுவரப்பட்டது. சூப்பர் ஓவரில் முதலில் பட் செய்த இலங்கை அணி 2 ரன்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்தது.

3 ரன்களை துரத்திய இந்திய அணிக்கு சூர்யகுமார் யாதவ் களமிறங்கினார். இவர் எதிர்கொண்ட முதல் பந்தை பவுண்டரிக்கு விளாச இந்திய அணி வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. இந்த வெற்றி மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை இந்திய அணி முழுமையாக கைப்பற்றி அசத்தியது. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வச்சந்நிதியானின் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மஹோற் சவம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங் கள் உற்சவங்கள் இடம்பெற வுள்ளன.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 13 ஆம் திகதி பூங்காவனம், 14 ஆம் திகதி கையிலாசவாகன திருவிழா, 17 ஆம் திகதி இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும் 18 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் 19 ஆம் திகதி காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது. (நி-6)



கிளிநொச்சி மாவட்ட முரசுமோட்டை முருகானந்தா கல்லூரியில் இடம்பெற்ற வலய மட்ட தமிழ்மொழித்தின போட்டியில் விவாதத்தில் முதலாம் இடத்தை பளை மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)பெற்று மாகாண மட்ட போட்டிகளுக்கும் தெரிவாகியுள்ளது. இப்போட்டியில் பளை மத்திய கல்லூரியைச் சேர்ந்த சி.ரம்சி, ஆ.அபினாஸ், இ.பிரியங்கா ஆகியோர் இப்போட்டிகளில் கலந்து கொண்டிருந்தனர். (படம்- தேவானந்தன்)


## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies

**Admission for Postgraduate Research Programme**
**Master of Philosophy (MPhil) & Doctor of Philosophy (PhD) – 2024**

The Faculty of Graduate Studies, University of Jaffna invites applications from eligible candidates for Master of Philosophy (MPhil) and Doctor of Philosophy (PhD).

Please visit our website (www.grad.jfn.ac.lk) for more details.

Contact the Faculty of Graduate Studies (T.P. No : 021 222 3608) in office hours for further clarifications.

Registrar
31/07/2024

(C-896)


## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -24, இராசாவின் தோட்டம் வீதி, 48B என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் M.P.ஜோசப் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம், இல-32, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை பெண் றீற்றம்மா 17.10.2004 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி. சி.ஜெயசித்திரா முகதாவில் 60 ஆம் இலக்க வெளிப்படுத் தல் உறுதி மூலம், சுண்டிக்குளி இறையில் உள்ள "பூந்தோட்டம்" என்ற பெயர் கொண்ட நிலப்பரப்பு முக்கால்(3/4) விஸ்தீரணம் கொண்ட ஆதனம் தன்னால் 30 வருடங்களுக்கு மேலாக எதுவித இடையீடும், குழப்பமும் இன்றி எவருக்கேனும் வாடகையோ, பயன்களோ செலுத்தாமலும், எவரது உரித்தையும் அங்கீகரிக்காது எதிர் உரித்தாகவும் ஆண்டு அனுபவித்து வருவதால் ஆட்சி உரிமைப்படி தனக்குச் சொந்தமானது என்று வெளிப்படுத்தி யுள்ளார்.

குறித்த ஆதனத்தை, செபஸ்ரியாம்பிள்ளை பெண் றீற்றம்மா உரித்து மாற்றம் செய்யாது மரணிக்க அவரது பிள்ளைகளான வேப்பங்குளம், அடம்பன், மன்னார் எனும் முகவரியைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை சிந்தாத்துரை ராசா, செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் ராஜபாத், செபஸ்ரியாம்பிள்ளை அன்ரன் பேர்சசஸ், அருமைலிங்கம் அனுரா மற்றும் அனுரா பெண் மேரி அமல வேணி ஆகியோர் 12.04.2024 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.சி.ஜெயசித்திரா முகதாவில் 5515 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் வேலார்த்தன் செல்லத்துரைக்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக்குளி இறை, இது யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதியில், யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/74 கிராம சேவகர் பிரிவில் உள்ள "பூந்தோட்டம்" நிலப்பரப்பு முக்கால்(3/4). இதற்கு எல்லைகள்

கிழக்கு - யோகராசா பெண் வசந்தாவின் ஆதனம்.
வடக்கு - அந்தோனிப்பிள்ளை ஜீவரட்ணத்தின் ஆதனம்.
மேற்கு - றோட்டு.
தெற்கு - சண்முகத்தின் ஆதனம்,இதடங்கலும்

தற்போது வேலார்த்தன் செல்லத்துரை இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத் தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது வேலார்த்தன் செல்லத்துரை என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

(சி-892) ஆணையாளர், யாழ் மாநகர சபை.

# இராசிபலன்

01.08.2024
ஆடி 16, வியாழக்கிழமை
துவாதசி பிற்பகல் 5.18 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 12.48 மணிவரை

சுபநேரம்-7.33-9.03 மணிவரை
இராகுகாலம்-1.33-3.03 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்
சித்திரை,சுவாதி.

வளவன்

**மேஷம்** - குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம், சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** - தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மாற்றங்களால் ஏற்றமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** - உறவினர்கள் வழியில் மனநிறைவான செய்தி ஒன்று வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** - சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** - பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றமுண்டு, வியாபார விருத்தியுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** - தொழில் வருமானத்தை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு,பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**விருச்சிகம்** - வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உயர்வான வாழ்க்கையில் கௌரவக்குறைவான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்** - பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாய முண்டு.

**மிதுனம்** - பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** - காலைப் பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், பிறர் உதவியுண்டு.

**தனுசு** - குடும்பத்தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வெளியூர்ப் பயணங்கள் அனுகூலம் தரும், நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.


**மீனம்** - தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், அடுத்தவர் விவகாரங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், உறவினர்களின் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம்.

ஆயுளை நீட்டிக்க வேண்டுமென்றால் உணவைக் குறைத்துக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தாவில் பகுதியில் டிப்பர்- மோ.சைக்கிள் விபத்து

## இருவர் படுகாயம்



(தருமபுரம்)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் டிப்பர் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதி இருவர் படுகாயம்.

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் ஏ-9வீதியில் யாழ் நோக்கிமோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் மகளும் இத்தாவில் பாடசாலை பக்கம் திரும்ப முற்பட்ட வேளை எதிரே வந்த டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

காயமடைந்தவர்கள் அங்கிருந்த இளைஞர்களால் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

ஆங்கில தின போட்டி ஒன்றிற்காக தனது மகளை பாடசாலைக்கு ஏற்றி சென்ற வேளையே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-316)

# அயடீன் குறைந்த உப்பு விற்பனை 3 வர்த்தகர்களுக்கு தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் அயடீன் அளவு குறைந்த உப்பினை விற்பனை செய்தவர் , விநியோகித்தவர் , உப்பு நிறுவன உரிமையாளர் ஆகிய மூவருக்கும் நீதிமன்றம் தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்துள்ளதுடன் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் பகுதியில் பலசரக்கு கடையொன்றில் , கடந்த மார்ச் மாதம் 12ஆம் திகதி பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவினால் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அதன் போது , அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உப்பில் சந்தேகம் அடைந்ததையடுத்து அதனை நீதிமன்ற அனுமதி பெற்று , அரச பகுப்பாய்வு திணைக்களத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பி இருந்தனர்.

பகுப்பாய்வு திணைக்கள பரிசோதனை அறிக்கையில், நியம அளவை விட குறைந்த அளவு அயடீன் உப்பில் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனை அடுத்து கடை உரிமையாளர் , உப்பு விநியோகஸ்த்தர் மற்றும் புத்தளத்தை சேர்ந்த உப்பு நிறுவன உரிமையாளர் ஆகியோருக்கு எதிராக யாழ். நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்ற போது , குற்றம் சாட்டப்பட்ட மூவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்த மன்று , புத்தளத்தில் அமைத்துள்ள உப்பு தொழிற்சாலையை பரிசோதிப்பதற்கு ஏதுவாக நிறுவனம் அமைந்துள்ள பிரதேச சுகாதார திணைக் களத்திற்கு அறிவித்தல் வழங்கி , அது தொடர்பிலான அறிக்கையை பெற்று எதிர்வரும் 10ஆம் மாதம் 1ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்குமாறு பொது சுகாதார பரிசோதகருக்கு கட்டளையிட்டு , அன்றைய தினத்திற்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (நி-6-30)

லங்கா மஹால் (PVT) LTD
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(181)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
0091956156719
Western Union WU MoneyGram Ria Money Transfer
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# கிளிநொச்சியை வந்தடைந்த சீன அரசின் மீன்பிடி வலைகள்



(தருமபுரம்)

சீன அரசாங்கம் வடக்கு, கிழக்கு மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் மீனவர்களுக்கு பொருத்து வீடு, அரிசி என்பவற்றை ஏற்கனவே வழங்கிய நிலையில் மற்றுமொரு வாழ்வாதார உதவியாக மீனவர்களுக்கு வழங்குவதற்காக மீன்பிடி வலைகள் நேற்றுகிளிநொச்சி கொண்டுவரப்பட்டன.

கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்திற்கு பார ஊர்தியில் வலைகள் கொண்டுவரப்பட்டன. இந் நிலையில் மாவட்டத்தில் 1060 மீனவர்களுக்கு குறித்த வலைகள் வழங்கப்படவுள்ளன. (நி-6-316-350)


## சுதேச மருத்துவ திணைக்களம், வடமாகாணம்

## பெறுகைகளுக்கான அழைப்பு

### உலர் உணவு மற்றும் சமைத்த உணவு வழங்கல் சேவை- 2024/2025

1. வட மாகாண சுதேச மருத்துவ திணைக்கள பெறுகைகள் குழுத்தலைவர், மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கும் சித்த வைத்தியசாலைகளுக்கு தேவையான உலர் உணவு மற்றும் சமைத்த உணவு வழங்கல் சேவைக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை சேவையாளர்களிடமிருந்து அல்லது நிறுவனத்திடமிருந்து கோருகின்றார்.

| தொ இல | பெறுகை இல. | சேவை விபரம் | கேள்விப் பிணைப்பணம் | |
|---|---|---|---|---|
| | | | தொகை (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| 01. | NP/22/02/FM09/RAWFOOD/VAV/2024/2025 | உலர் உணவு வழங்கல் சேவை – 2024/2025 ஆதார சித்த வைத்தியசாலை. பம்பைமடு. வவுனியா | 60,000.00 | 09.11.2024 |
| 02. | NP/22/02/FM09/COOKFOOD/JAF/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை – 2024/2025 மாவட்ட சித்த வைத்தியசாலை. யாழ்ப்பாணம் | 15,000.00 | 09.11.2024 |
| 03. | NP/22/02/FM09/COOKFOOD/KIL/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை – 2024/2025 மாவட்ட சித்த வைத்தியசாலை.கிளிநொச்சி | 15,000.00 | 09.11.2024 |
| 04. | NP/22/02/FM09/COOKFOOD/MAN/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை – 2024/2025 மாவட்ட சித்த வைத்தியசாலை. மன்னார் | 15,000.00 | 09.11.2024 |
| 05. | NP/22/02/FM09/COOKFOOD/MUL/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை – 2024/2025 மாவட்ட சித்த வைத்தியசாலை. முல்லைத்தீவு | 15,000.00 | 09.11.2024 |
| 06. | NP/22/02/FM09/COOKFOOD/PAN/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2024/2025 கிராமிய சித்த வைத்தியசாலை. பண்டத்தரிப்பு | 10,000.00 | 09.11.2024 |
| 07. | NP/22/02/FM09/COOKFOOD/TELL/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2024/2025 கிராமிய சித்த வைத்தியசாலை. தெல்லிப்பளை | 10,000.00 | 09.11.2024 |
| 08. | NP/22/02/FM09/COOKFOOD/KAR/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2024/2025 கிராமிய சித்த வைத்தியசாலை. கரவெட்டி | 10,000.00 | 09.11.2024 |
| 09. | NP/22/02/FM09/COOKFOOD/KOD/2024/2025 | சமைத்த உணவு வழங்கல் சேவை - 2024/2025 கிராமிய சித்த வைத்தியசாலை. கொடிகாமம் | 10,000.00 | 09.11.2024 |

2. உலர் உணவு மற்றும் சமைத்த உணவு விநியோகத்திற்கான விலைக்கேள்விதாரர்கள் வலுவான வியாபார பதிவுச்சான்றிதழைக் கொண்டிருக்கின்ற ஒரு தனி நபராகவோ அல்லது தனிப்பட்ட நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும். மேலும் குறித்த நிறுவனமானது வடமாகாணத்தில் நிறுவனத்தினையோ அல்லது பதிவு செய்யப்பட்ட கிளையினையோ கொண்டிருத்தல் வேண்டும்.

3. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள சேவையாளர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக்கேள்விப் பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில் இத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே - 021-222-0824)

4. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இத் திணைக்களத்தில் கிடைக்கும் விண்ணப்பப்படிவத்தினை பூர்த்திசெய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மீளளிக்கமுடியாத பெறுகைக் கட்டணமாக உலர் உணவுக்கு ரூபா 3000.00 ,சமைத்த உணவுக்கு ரூபா 1000.00 காசாக செலுத்தி தமிழ் மொழியிலான பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் **01.08.2024 தொடக்கம் 13.08.2024** வரையான காலப்பகுதியில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

5. விலைக்கேள்வித்தாரர்களிற்கான முன் பெறுகைக் கூட்டம் (Pre Bid Meeting) ஆனது **09.08.2024** ஆம் திகதி காலை 11.00 மணிக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தில் நடைபெறும்.

6. விலைக்கேள்விகள் **14.08.2024** ஆம் திகதி காலை 10:30 மணிக்கு முன்பதாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும்.அல்லது நேரடியாக இத் திணைக்களத்தின் **கணக்காளரின் அறையில் உள்ள பெறு கைப்பெட்டியினுள்** இடல் வேண்டும் **விலைக்கேள்விகள் அனைத்தும் உடனடியாகவே திறக்கப்படும்.**

7. **"சேவையின் விபரம் .........., பெறுகை இல......"** போன்ற விபரம் கடித உறையின் மேல் மூலையில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரையிடப்படாத, விபரம் குறிப்பிடப்படாத மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் ஏற்கப்படாமல் திருப்பியனுப்பப்படும்.

8. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைகேள்வியாளர்களுக்கான பொறுப்புக்கள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக ,ரத்துச்செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

(சி-894)

Dr.திருமதி.க.ஜெபநாமகணேசன்,
தலைவர், மாகாண திணைக்கள பெறுகைகள் குழு
வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம்,
இல.611,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021-222-0824
தொலைநகல் : 021-222-0822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லூன்றியில் ஆடி அமாவாசை

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசை நிகழ்வுகள் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமைபோல் நடைபெறவுள்ளது.

வில்லூன்றி விநாயகராலயத்தில் அதிகாலை விசேட அபிஷேகம், பூசை நடைபெற்று காலை 6.45 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் தீர்த்த வாரியும் நடைபெறும்.

காலை எட்டு மணி முதல் பொது மக்கள் வில்லூன்றி புனித தீர்த்தக் கரையில் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ள விரிவான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது என ஆலய தர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை அங்காடியினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

**01.09.2024 தொடக்கம் 31.08.2025 வரை**

யாழ்.போதனா வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத் தலைவர் தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துநர்களிடமிருந்தும் மற்றும் பல்பொருள் விற்பனை நிலைய நடாத்துநர்களிடமிருந்தும் 01.09.2024 தொடக்கம் 31.08.2025 வரையான காலப்பகுதிக்கு யாழ்.போதனாவைத்திய சாலையில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலை மற்றும் பல்பொருள் விற்பனை நிலையத்தினை நடாத்துவதற்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

1. வைத்தியசாலை பகுதியில் உள்ள பின்வரும் விற்பனை நிலையங்கள் ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்படவுள்ளது.
   1. வைத்தியசாலையில் அமைந்துள்ள பிரதான சிற்றுண்டிச்சாலை.
   2. பல்பொருள் விற்பனை நிலையம் (Food City).
2. நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் இவ் வைத்தியசாலையில் கிடைக்கும் "கேள்வி கோரும் ஆவணங்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்" என்ற படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணமாக ரூபா 2000/= காசாக அலுவலக காசாளரிடம் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாட்களில் 01.08.2024 தொடக்கம் 16.08.2024 வரையான காலப்பகுதியில் (மு.ப) 09.00 மணி தொடக்கம் (பி.ப) 03.00 மணிவரை (பி.ப 12.30 தொடக்கம் பி.ப 01.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்வி தொடர்பான முன்னோடிக் கூட்டம் 07.08.2024 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.
4. கேள்விதாரர்கள் மீளளிக்கப்படக்கூடிய வைப்புக் கட்டணமாக (Bid Bond) ரூபா 50,000/= ஐ அலுவலகத்தில் செலுத்தி அதனுடைய பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும் கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. விண்ணப்பப்படிவங்களை பெற வரும் போது உணவகத்திற்குரிய வியாபார பெயர்ப்பதிவுச் சான்றிதழின் (Business Registration) பிரதியையும், குறித்த உள்ளூராட்சி அதிகார சபையினால் வழங்கப்பட்ட வியாபார அனுமதிப்பத்திரத்தின் பிரதியினையும் மற்றும் சுகாதாரப் பகுதியினால் வழங்கப்பட்ட "A" அல்லது "B" தரச் சான்றிதழின் பிரதியையோ அல்லது அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஏனைய சான்றிதழின் பிரதியையோ கட்டாயம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
6. விலைக் கேள்விகள் 16.08.2024 திகதி (பி.ப) 03.00 மணிக்கு முன்பதாக இவ் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. சமைத்த உணவுகளை வழங்குவதற்காக தங்களால் பயன்படுத்தப்படும் சமையற்கூடமானது வைத்தியசாலையிலிருந்து 10 கி.மீ உட்பட்டிருப்பதுடன் உரிய தகுதி விதிகளைப் பூர்த்தி செய்துள்ளதா என்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் நேரடி பரிசோதனை மூலம் மதிப்பீடு செய்யப்படும்.
8. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும் விலைக் கேள்விபத்திரங்களையும் அலுவலக நேரங்களில் கீழ்க்காட்டப்பட்ட முகவரியில்/ தொலைபேசி இலக்கத்துடன் 021-222 2261 (Exchange No 204/205) தொடர்பை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
9. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு பிராந்திய பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.
10. மேற்படி வைத்தியசாலையின் சிற்றுண்டி உணவகத்தை நடாத்த விண்ணப்பம் செய்யும் எவரும் வைத்தியசாலையினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

(சி-893)

**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம்- தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்- எடிசன் கைம்பெண் ஆன்மியூலின்**
**முகவரி- வலித்தூண்டல், கீரிமலை.**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை. தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01. மாவிலங்காடு வீதி, இலக்கம் 15 சொந்தக்காரர் உ.கோ.டொமினிக் மாசிலாமணி என ஆதனப் பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 09ஆம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் அனரன் பாலசிங்கம் முகதாவில் 7028ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி எடிசன் கைம்பெண் ஆன்மியூலின் என்பவர்களை வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை வடமேற்கிறை நிலப்பரப்பு 1 1/2 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே.நவரட்ணம் அவர்களால் வரையப்பட்ட 1698/ 21.04.2018 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு -01,02,03 ஆம் துண்டு ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு- துண்டு 2 எனச் சுட்டப்பட்ட இரத்தினராசா அன்ரனி பெண் சகாயமணியின் ஆதனம்
வடக்கு- விக்ரர் மரியாமலரும் அந்தோனிப்பிள்ளை மங்கள அமரியநீற்றாவுக்கும் உரிய ஆதனங்கள்
மேற்கு- மிகுதி ஆதனம்
தெற்கு- றோட்டு

மேற்குறித்த ஆதனத்தை எடிசன் கைம்பெண் ஆன்மியூலின் எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(581)

**செயலாளர்,வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேசசபை உப அலுவலகம்- தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்- டென்சில் ராஜ்குமார் கைம்பெண் பிராவ்தா**
**முகவரி- வலித்தூண்டல், கீரிமலை,**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 01, மாவிலங்காடு வீதி, இலக்கம் 15 சொந்தக்காரர் உ.கோ.டொமினிக் மாசிலாமணி என ஆதனப்பதிவேட்டில் உள்ளது.

குறித்த ஆதனமானது 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் நாகேந்திரன் பார்த்தீபன் முகதாவில் 1014ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை உறுதிப்படி டென்சில் ராஜ்குமார் கைம்பெண் பிராவ்தா என்பவர்களை வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை வடமேற்கிறை நிலப்பரப்பு இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 3154/ 21.01.2022 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு -01 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு - குறித்த படத்தில் துண்டு 2ஆக காட்டப்பட்டுள்ள இதன் மிகுதி ஆதனம்
வடக்கு- விக்ரர் மரியாமலரின் ஆதனமும் தர்மன் குருசுப் பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும்
மேற்கு- தர்மன் குருசுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும்
தெற்கு- வீதி இவ்வெல்லைப்படி இதடங்கலும்

மேற்குறித்த ஆதனத்தை டென்சில் ராஜ்குமார் கைம்பெண் பிராவ்தா எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(581)

**செயலாளர்,வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# கேரளா மண்சரிவு அனர்த்தம்
# 171 பேரின் சடலங்கள் மீட்பு



(டில்லி)

இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட பாரிய மண்சரிவு அனர்த்தம் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 171 ஆக அதிகரித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வயநாடு மாவட்டத்தின் முண்டக்கை, அட்டமலை, சூரல்மலை, குன்ஹோம் உள்ளிட்ட பல பகுதிகளில் நேற்று முன்தினம் அதிகாலை பெரும்பாலான மக்கள் உறக்கத்திலிருந்த போது இந்த மண்சரிவு சம்பவங்கள் ஏற்பட்டுள்ளன.

நூற்றுக்கும் அதிகமானோர் மண்சரிவுகளில் சிக்கியிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், தொடர்ந்தும் மீட்புப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.இந்த சம்பவத்தில் காயமடைந்த 186 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு 45 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர்.

தேயிலை மற்றும் ஏலக்காய் தோட்டங்கள் அமைந்துள்ள பகுதிகளில் இந்த அனர்த்தம் பதிவாகியுள்ளதுடன், குறித்த பகுதிகளில் சுமார் 350 குடும்பங்கள வசித்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# வட...
# கிம் ஜ...

## கசிந்...

(பியாங்யாங்) —

வடகொரியாவின் ...
ஜாங் உன்னின் மக...
யுள்ளமை பரபரப்...

தென் கொரியாவின் உளவு நிறுவனம் ஒன்று வடகொரியாவின் அரசியல் நிலவரங்கள் தொடர்பில் வெளியிட்டுள்ள தகவலின் அடிப்படையில் இது தெரிய வந்துள்ளது.

இதே... ஜனாதிப... களுக்கு ... உடன் ... இப்போ... வருகிற...

# பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல்
## 30 பேர் உயிரிழப்பு

(காசா)

இஸ்ரேல் மற்றும் காசா இடையிலான போர் கடந்த 9 மாதத்துக்கும் மேலாக தொடர்ந்து வரும் நிலையில் இஸ்ரேல் நடத்திய இராணுவத் தாக்குதலில் இதுவரை 38 ஆயிரத்துக்கும் அதிகமான பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மத்திய காசாவின் டெயர் எர்-பலா பகுதியில் உள்ள பாடசாலையில் இஸ்ரேல் இராணுவம் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது.


இந்தத் தாக்குதலில் குழந்தைகள், பெண்கள் என மொத்தம் 30 பேர் பலியாகியுள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலிய படைகள் ரஃபா நகரின் மேற்கு மற்றும் வடக்குப் பகுதிகளை நோக்கி முன்னேறும்போது இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவுடன் கட்டார், எகிப்து உள்ளிட்ட நாடுகளின் முன்முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட இஸ்ரேல்-ஹமாஸ் போர்நிறுத்த அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி முகத்தில் உள்ள நிலையில், இஸ்ரேல் பிரதமர் அமெரிக்கா சென்றுள்ள போது , இந்த தாக்குதல் நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (நி-6)



# ஹமாஸ் ஆயுதக்குழுவின்
## தலைவர் சுட்டுப் படுகொலை



(டெஹ்ரான்)

ஹமாஸ் ஆயுதக்குழுவின் தலைவராகச் செயற்பட்டு வந்த இஸ்மாயில் ஹனியே ஈரானில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள அவரது வீட்டில் வைத்து இஸ்மாயில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன், அவருடன் அவரது உதவியாளரும் கொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நீடித்து வரும் நிலையில், ஹமாஸ் தலைவர்இஸ்மாயில்ஹனியே தங்கியிருந்த வீட்டை குறி வைத்து இஸ்ரேலிய படைகள் நடத்திய தாக்குதலில் அவர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இஸ்ரேல் -ஹமாஸ் படைகளுக்கு இடையே பல மாதங்களாக போர் நீடித்து வருகிறதுடன் இதில் இதுவரை உயிரிழந்த பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 39 ஆயிரத்தை கடந்தத்துள்ளது.

மேலும் 90 ஆயிரத்து 589 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ள நிலையில், தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினர் மீதான தாக்குதலை இஸ்ரேல் படைகள் தீவிரப்படுத்தி வருகின்ற நிலையில் இஸ்ரேல் தரப்பில் ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள் ளமை குறிப்பிடத்தக்கது.(நி-6)

# காசாவில்...
## போலியோவால்...

(காசா)

பாலஸ்தீனத்தின் காசா மீது இஸ்ரேல் நடத்தி வரும் போரில் குழந்தைகள், பெண்கள் உட்பட 39 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். போராலும் உணவு, தண்ணீர் பற்றாக்குறையாலும் காசா மக்கள் தவித்து வருகிறார்கள்.

இந்த நிலையில் காசாவில் குழந்தைகள் போலியோவால் பாதிக்... டுள்ள... அமை...

இது... பின் ... கூறும்... நீர் மா... இருப்... றியப்ப...

உ... காசா...



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொரிய ஜனாதிபதியாக ஜாங் உன்னின் மகள்

## சிந்த தகவலால் பரபரப்பு



ங்)

**வின் அடுத்த அரசியல் வாரிசாக ஜனாதிபதி கிம் ன் மகள் ஜு ஏ வரலாம் என செய்திகள் வெளியாகி பரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

இதேவேளை, வட கொரிய ஜனாதிபதி கிம் பொது இடங்களுக்கு தன் மகளையும் உடன் அழைத்துச் சென்று இப்போதே பயிற்சி அளித்து வருகிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன் படி வடகொரியாவின் ஜனாதிபதியாக 2011 இல் பதவியேற்ற கிம் ஜனாதிபதி பொறுப்பில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விலகி வருவதாக குறிப்பிடப்படுகிறது.

எனினும் அணு ஆயுதம் மற்றும் ஏவுகணை சோதனைகளை நடத்தி அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளுக்கு மிரட்டலும் விடுத்து வருகிறார்.

இந்த நிலையில், தற்போது இந்தத் தகவல் வெளியாகியிருக்கின்றமை சர்வதேச ரீதியில் பேசு பொருளாக மாறியுள்ளது. (நி-6)

# இல் குழந்தைகள்

## வால் பாதிக்கப்படும் அபாயம்

பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக உலக சுகாதார அமைப்புத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் கூறும்போது, காசாவில் கழிவு நீர் மாதிரிகளில் தொற்று நோய் இருப்பது சமீபத்தில் கண்டறியப்பட்டது.

உலக சுகாதார நிறு வனம் காசாவிற்கு 1 மில்லியன் போலியோ தடுப்பூசிகளை அனுப்புகிறது. தடுப்பூசிகள் குழந்தைகளைச் சென்றடைவதை உறுதிசெய்ய போர் நிறுத்தம் தேவை எனத் தெரிவித்தார்.

காசாவின் சுகாதார அமைச்சகம் போலியோ தொற்று நோய் பரவுவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தது. (நி-6)




# ஈரானின் புதிய ஜனாதிபதியாக மசூத் பெசஸ்கியான் பதவியேற்பு

(டெஹ்ரான்)

ஈரான் ஜனாதிபதியாக இருந்த இப்ராஹிம் ரைசி கடந்த மே 17 ஆம் திகதி அஜர்பைஜான் எல்லையில் நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தனைத் தொடர்ந்து அடுத்த ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஈரானில் கடந்த ஜூன் 28 ஆம் திகதி நடந்தது.

இந்தத் தேர்தலில் யாருக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், ஜூலை 5 ஆம் திகதி நடந்த இரண்டாம் கட்டத் தேர்தலில் சீர்திருத்தக் கட்சி வேட்பாளர் மசூத் பெசஸ்கியான் 54 சதவீத வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.



அதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நடந்த பதவியேற்பு விழாவில் ஈரான் ஜனாதிபதியாக மசூத் பெசஸ்கியான் பதவியேற்றுள்ளார்.

இந்தப் பதவியேற்பு விழாவில் 'புனித குரான் மற்றும் ஈரான் பிரஜைகளின் முன்னிலையில், இஸ்லாமிய குடியரசுக்கும், நாட்டின் அரசியலமைப்புக்கும் பாதுகாவலனாக இருப்பேன் என்று கடவுள் மீது ஆணையாக உறுதியேற்கிறேன்' என அவர் உறுதி மொழி அளித்துள்ளார். (நி-6)

## ஹமாஸ் தலைவரின் படுகொலை

# முழுமையான யுத்தத்தை நோக்கி மத்திய கிழக்கை நகர்த்தியுள்ளது

(டெஹ்ரான்)

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டுள்ளமை மத்திய கிழக்கை முழுமையான ஒரு யுத்தத்தை நோக்கி நகர்த்தியுள்ளது என ஜோர்ஜ் டவுன் பல்கலை கழகத்தின் மத்திய கிழக்கு விவகாரங்களிற்கான பேராசிரியர் நடெர் ஹசேமி பிபிசிக்கு தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் தலைவரின் படுகொலை முன்னர் ஒருபோதும் இல்லாத அளவிற்கு மத்திய கிழக்கை முழுமையான யுத்தத்தை நோக்கி நகர்த்தியுள்ளது. இது பெரும் திருப்பு முனை என அவர் தெரிவித்துள் அவர் ஹனியேயின் படுகொலைக்கு பின்னர் இந்த மோதலை தீவிரப்படுத்து வதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈரான் ஈடுபடலாம் எனவும் தெரிவித்துள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலை வெட்டுப்புள்ளிகள் அடுத்த மாத இறுதிக்குள்

## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகள் தயாரிக்கும் பணியை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கு 87,000 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

எவ்வாறாயினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் போதிய ஆளணிகள் இல்லாத காரணத்தினால் சில தடைகள் ஏற்பட்டுள்ளதோடு, பல பல்கலைக் கழகங்களின் அதிகாரிகளை நியமிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, அடுத்த மாத இறுதிக்குள் வெட்டுப்புள்ளிகளை வெளியிட திட்டமிடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-6)

# ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு அங்கீகாரம்



(பாரிஸ்)

பாரிஸில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் இலங்கையின் பாரம்பரிய ஆடைக்கு மூன்றாம் இடம் கிடைத்துள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்றும் அனைத்து வீரர்களும் தங்களின் நாட்டைப் பிரதிபலித்து ஆடைகள் அணிவது வழக்கம். இதற்கமைய இவ் வருட ஒலிம்பிக் விழாவில் இலங்கைக்கு உயர் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

பாரம்பரிய ஆடைகள் அமைய முதலிடத்தை மொங்கோலிய நாடு பிடித்துள்ளதுடன் இரண்டாவது இடத்தை மெச்சிக்கோவும் மூன்றாவது இடத்தை இலங்கையும் பெற்றுள்ளன. (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 150-250 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 250 | 200 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 500 | 400-450 | 500 |
| தக்காளி | 400 | 300 | 300 | 260 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 160 | 120-140 | 200 |
| கோவா | 350 | 350 | 400 | 300 | 400 |
| கரட் | 400 | 450 | 450 | 400 | 480 |
| பூசணி | 200 | 160 | 200 | 150 | 150 |
| புடோல் | 160 | 150 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 160-200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 450 | 350 | 250-500 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | 220 | 200 |
| பாகற்காய் | 800 | 300 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 200 | 200 | 150 | 250 | 320 |
| கருணைக் கிழங்கு | 200 | 140 | 160 | 100 | 240 |
| பயற்றங்காய் | 150 | 200 | 200 | 100-150 | 150 |
| லீக்ஸ் | 450 | 500 | 450 | 400 | 500 |
| பீற்றூட் | 400 | 350 | 400 | 400 | 450 |
| கறிமிளகாய் | 800 | 800 | 1200 | 400 | 1200 |
| முருங்கைக்காய் | 100 | 140 | 150 | 70-100 | 150 |
| போஞ்சி | 600 | 650 | 700 | 420 | 800 |
| கத்தரி தம்புள்ள | 150 | 140 | 250 | 50 | 220 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 40 | -- | 80 |
| தேசிக்காய் | 400 | 650 | 600 | 500-600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 120 | 80 | 60-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 400 | 650 | -- | 600 |
| வெங்காயப்பூ | 400 | 150 | 400 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 120 | 100 | 100 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 120 | 80 | 50 | 100 | 60 |

# இன்று ஒரு தகவல் 200



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

## வாகன வசதிகள்

ஒருவர் உடம்பு முழுவதும் கட்டுப் போட்டுக் கொண்டு வந்து சேர்ந்தார். என்ன ஆச்சு?என்று பரபரப்போடு கேட்டேன். ஒன்றுமில்லை வருகின்ற வழியிலே ஒரு சின்ன விபத்து அது தான் இப்படி ஆகிவிட்டது என்றார் சாவகாசமாக. சின்ன விபத்திற்கா இப்படி உடம்பு முழுவதும் கட்டு? என்றார். சும்மா ஒரு எச்சரிக்கைக்காக அப்படி கட்டுப்போட்டிருக்கின்றேன் என்றார். அவர் ஒரு மாதிரியான ஆள் அப்படித்தான் பேசுவார். சரி என்ன நடந்தது? விபரமாகச் சொல்லுங்கள்.

ஸ்கூட்டர்லே வேகமாக வந்து கொண்டிருந்தேன். எதிரே ஒரு எருமை மாடு மெதுவாக வந்துகொண்டிருந்தது. இரண்டும் மோதிக் கொண்டது. நான் தூரத்திலே போய் விழுந்தேன். எருமைக்கு ஒன்றும் ஆகவில்லை ஸ்கூட்டருக்கும் ஒன்றும் ஆகவில்லை. நான் தான் இப்படி ஆகிவிட்டேன் என்றார். கண்ணைத் திறந்து கொண்டு வரவேண்டும் என்று அறிவுரை செய்தேன் என்றார். கண்ணைத் திறந்து கொண்டு வந்தும் இது நடந்து விட்டது என்றார்.

அது எப்படி நடக்கும் நீங்கள் ஒதுங்கிப் போயிருக்கலாமே! என்றார். கண்ணைத் திறந்து கொண்டு வந்தது நான் இல்லை சார் எருமை மாடு என்றார். இப்படித்தான் அவர் பேசிக்கொண்டிருப்பார். அதனாலே தான் அவரை ஒரு மாதிரியான ஆள் என்று சொன்னேன்.அவர் எப்படியோ இருந்திட்டுப் போகட்டும். ஆனால் எல்லோரும் இப்படி அலட்சியமாக இருக்கக்கூடாது. விபத்தை விலை கொடுத்து வாங்க கூடாது.

விபத்துக்களை தவிர்ப்பதற்கு விலை கொடுக்கலாம்.அதுக்கு எப்படி விலை கொடுப்பது. Electronic speed control unit ஐ வாங்கி வாகனங்களுக்குள்ளே பொருத்தலாம்.நம்ம ஊரில் எல்லாம் பேருந்தும் லாரியும் வேகத்தை குறைத்தாலே பல விபத்துக்களை குறைத்து விட முடியும். Electronic speed control unit என்று சொல்கின்றோமே இந்த வேகக்கட்டுப்பாட்டுக் கருவி என்ன செய்யும் தெரியுமா?

அளவுக்கு மீறி ஒரு பேருந்து வேகமாக போகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். இப்போது உதாரணத்திற்கு மணிக்கு 60 கிலோ மீற்றர் வேகத்திற்கு மேலே வண்டி போகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். உடனே அந்த கருவி என்ன செய்யும் என்றால் பீப் பீப் என்று சத்தம் போடும். அந்த சத்தத்தைக் கேட்டு வண்டியை ஓட்டுகின்றவர்கள் வேகத்தை குறைக்க வேண்டும். அப்படி குறைக்காமல் இன்னும் வேகமாக போகின்றோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். இஞ்சின் தானாகவே நின்றுவிடும். அது மட்டும் இல்லை அதன்பின் ஒரு ஐந்து நிமிடம் அதை ஸ்டார்ட் பண்ண முடியாது. அங்கேயே நிற்க வேண்டியது தான். ஐந்து நிமிடத்திற்கு பின்பு தான் அந்த இடத்தை விட்டுப்புறப்பட முடியும் .

அதனாலே அதிவேகத்திலே போவதற்கு யாரும் முயற்சி செய்ய மாட்டார்கள். வேகத்தை கட்டுப்படுத்துவதனாலே விலை மதிப்பில்லா உயிர்களை காப்பாற்ற முடியும். அதனாலே இதை ஒரு பெரிய அசௌகரியமாக யாரும் நினைக்கக்கூடாது. ஏற்கனவே நம்ம ஊர் பேருந்துகளிலே இதை வைத்திருந்தார்களாம். ஆனால் சில பேர் மிகவும் சாமர்த்தியமாக இந்த கருவியோட இணைப்பை நிறுத்தி விட்டு வழக்கம் போலவே மிகவும் வேகமாக ஓட்ட ஆரம்பித்து விட்டார்களாம்.

காரிலே போறவர்களுக்கும் குடும்பம் இருக்கின்றது. ரோட்டுலே போறவங்களுக்கும் குடும்பம் இருக்கின்றது. அதை கொஞ்சம் நினைத்துப் பார்க்க வேண்டும் சார். இந்த வேகக்கட்டுப்பாடு கருவியை யாரும் சுலபமாக எதுவும் பண்ணிவிட முடியாத அளவுக்கு அதை பொறுத்துவதற்கு வழியை பார்க்கணும் என்கின்றார் ஒரு வாசகர். அதிக தூரம் போகும் பேருந்துகள் எல்லாம் ஏர் கண்டீசன் பண்றோம்- வீடியோ வசதியெல்லாம் பண்றோம். அவற்றிற்கு செலவு செய்யும் பணத்தை இது போன்ற ஸ்பீட் மானிட்டர் அப்புறம் VHF டிரான்சீவர் இதுகளுக்காக செலவு பண்ணலாம்.

வண்டி நடுவழியிலே எங்கேயாவது நின்று போனால் அல்லது எதிர்பாராமல் விபத்து ஏற்பட்டுப் போனால் உடனே தகவல் குடும்பதிற்கும் உயிரை காப்பாற்றுவதற்கும் இந்த ஒயர்லெஸ் வசதி உதவியாக இருக்கும். செலவையெல்லாம் ஒரு பொருட்டாக கருதாமல் இதையெல்லாம் செய்தால் விபத்துக்களை பெருமளவிற்கு தவிர்க்கலாம். விபத்துக்களுக்கு எவ்வளவோ காரணங்கள் இருக்கு. அதை எல்லாத்தையுமே கவனித்து சரி செய்ய வேண்டும். எனக்கு மிகவும் நெருக்கமான ஒருவர். அவர் ஒரு பேருந்திலே ட்ரைவராக இருக்கின்றார். அவரிடம் ஒரு நாள் இந்த சாலை விபத்துக்களைப்பற்றி சாவகாசமாக பேசிக்கொண்டிருந்தேன்.

அவர் கொஞ்சம் முரட்டு சுபாவம் உள்ளவர். அதனாலே அவரிடம் சொன்னேன். இதுமாதிரி இனிமேல் உங்க சுபாவத்தை நீங்க மாற்றிக் கொள்ள வேண்டும். வீதியில் போகின்றவர்களும் மனிதர்கள் தான். மனிதனிற்கு மனிதன் மரியாதை கொடுக்க வேண்டும் என்று அடுக்கிட்டே போனேன்.

நீங்க சொல்லுகிற மாதிரி ஒரு மனிதனிற்கு மரியாதை கொடுக்கப் போய் தான் ஒரு நாள் ஒரு சின்ன விபத்து நடந்து விட்டது என்றார் அவர். அது எப்படி என்றேன்.ஒரு நாள் நான் டிரைவ் செய்து கொண்டு போன பேருந்திலே ஒரு வயதான தாத்தா நின்று கொண்டு வந்தார். பேருந்திலே இருப்பவர்கள் யாருமே அவர்மேல் இரக்கப்படவில்லை. நான் இரக்கப்பட்டேன் என்றார். என்ன செய்தீர்கள்? என்றேன். நான் எழுந்து அவரை என் இடத்திலே உட்கார வைத்தேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டுப்படுத்தப்பட்ட நேர ஒழுங்கில் கிளிநொச்சியில் குடிநீர் விநியோகம்

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

(அக்கராயன்)

கிளிநொச்சி நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தித்திறனை விட மக்களின் பாவனை அதிகரித்துள்ளமையால் நீர் விநியோகத்தை 24 மணி நேரமும் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இதன் காரணமாக இனிவரும் நாட்களில் மட்டுப்படுத்தப்பட்ட நேர ஒழுங்கில் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என கிளிநொச்சி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சியாக வெப்பமான காலநிலை நில விவருவதன் காரணமாக மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அதனடிப்படையில் பூநகரி, பொன்னகர், பாரதிபுரம், விவேகானந்த நகர் ஆகிய பகுதிகளுக்கு தினமும் காலை 5 மணி முதல் பகல் 12 மணி வரை நீர் விநியோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியில் குறைந்த அழுத்தத்திலும் நீர் விநியோகம் காணப்படுவதனால் பொது மக்கள் நீரைச் சிக்கனமாகவும், சேமித்தும் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிளிநொச்சி அலுவலகம் அறிவித்துள்ளது.

(நி-6-316-350)

# பொலிஸாரை அச்சுறுத்தி படம் எடுத்த இளைஞன் கைது

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்குள் சென்று பொலிஸாரை அச்சுறுத்தும் வகையில் புகைப்படம் எடுக்க முற்பட்ட இளைஞன் ஒருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுக்குடியிருப்பில் பிரபல வர்த்தகர் ஒருவரிற்கு சொந்தமான காணியை முல்லைத்தீவைச் சேர்ந்த வேறு நபர் ஒருவர் அடாத்தாக காணிக்கு உரிமை கோரி வந்துள்ளார். இந்நிலையில் கும்பல ஒன்றால் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்தனைத் தொடர்ந்து குறித்த வர்த்தகரால் பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பாக விசாரணைக்கு சென்ற பொலிஸாருடன் முரண்பட்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு பொலிஸாரால் கைதாகியிருந்தார்.

குறித்த பெண்ணின் மகன் ஒருவர் நேற்று முன்தினம் இரவு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்குள் சென்று பொலிஸாரை அச்சுறுத்தி புகைப்படம் எடுக்க முற்பட்ட வேளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(நி-6-299)


# பெறுகை அறிவித்தல்
## நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்
## சபைநிதி-2024

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், வடமாகாணம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், வியாபாரப் பெயர்பதிவைக் கொண்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் (தொலைபேசி இலக்கங்கள்.021-222-2700, பக்ஸ் இல 021-222-0138 e.mail – npsnallur@gmail.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் 01.08.2024 ஆம் திகதியிலிருந்து 21.08.2024ஆம் திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 16.00 மணி வரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் எனும் இடத்திலிருந்து 01.08.2024ஆம் திகதியிலிருந்து 21.08.2024 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.1,500/- (வரி நீங்கலாக)செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும். கேள்வி ஆவணத்தினை பெறுவதற்கு கோரிக்கை கடிதத்துடன் வியாபாரப் பெயர்ப்பதிவுச்சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

06. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில், எனும் முகவரிக்கு 22.08.2024ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர், அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும். கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

07. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 30 (முப்பது) நாட்கள் (21.09.2024) வரையும் செல்லுபடியாகும்.

08. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை Rs.Mn(Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | மீளளிக்கப்படாத வைப்பு | கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணைத் தொகை (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41/(10)/Acc/ Proc/ Smart Boards | Procurement of Smart Boards | 3.0 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | 1,500.00 | 50,000.00 | 20.10.2024 |
| NP/14/41/(10)/Acc/ Proc/ Desktop Computers -2024 | Procurement of Desktop Computers | 3.8 | 01 மாதம் | பதிவு செய்யப்பட்ட நிறுவனம் (வியாபாரப் பெயர்ப்பதிவு) | 1,500.00 | 50,000.00 | 20.10.2024 |

தலைவர்,
பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேச சபை.
01.08.2024

(சி895)


# பரிசங்குளத்தில் குடிநீர்த்திட்டம்

(அக்கராயன்)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பரிசங்குளத்தில் யாழ்ப்பாணம் தொண்டமானாறு சந்நிதி ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளால் கடந்த வெள்ளிக்கிழமை குடிநீர்த் திட்டம் கையளிக்கப்பட்டுள்ளது.

பரிசங்குளத்தில் 16 குடும்பங்கள் குடிநீரினை பெற்றுக் கொள்வதில் நெருக்கடி நிலையினை எதிர்கொண்ட நிலையில் இக்கிராமத்தில் பாவனையற்று இருந்த பொதுக் கிணறு ஆழ்துளையிடும் கருவி மூலம் மேலும் ஆழமாக்கப்பட்டு நீர் விநியோக கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு தண்ணீர் தாங்கி மூலம் குடிநீர் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு குடிநீர் வழங்கும் தொடக்க நிகழ்வில் சந்நிதி ஆச்சிரம தொண்டர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மாதர் சங்க பிரதிநிதிகள், கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(நி-6-350)

# 'பயணிக்கும் வரலாற்று' அருங்காட்சியகம் மன்னாரில்

(மன்னார்)

வரலாற்று நிகழ்வுகளை இலகுவாக அறிந்து கொள்ளும் வகையில் "எமது காலம்" எனும் கருப் பொருளில் "பயணிக்கும் வரலாற்று" அருங்காட்சியகம் மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ளதோடு, எதிர்கால தலை முறையினர் தெரிந்து கொள்ள ஆவணப்படுத் தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கைக்கான செயற்றிட்ட நடவடிக்கை கூட்டம் நேற்று முன்தினம் காலை 10 மன்னார் அரசாங்க அதிபர் க. கனகேஸ்வரன் தலைமையில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் பழைய மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பயணிக்கும் வரலாற்று அருங்காட்சியகம் மன்னார் நகரில் 8 நாட்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட உள்ளது.

இதற்கான ஏற்பாட்டுத் திட்டம் மற்றும் மன்னார் மாவட்டம் தொடர்பான வரலாறு மற்றும் மாவட்ட எல்லைகள், மாவட்டத்தின் சிறப்பு, சமயம், கலாசாரம், பண்பாடுகள், கலை இன்னும் பல்வேறு வரலாற்று சிறப்புகள் தொடர்பான ஆய்வுகள், தரவுகள் மற்றும் பல்வேறு தரப்பினர்களையும் அறிந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டத்தில் குறித்த விடயம் தொடர்பான ஆக்கபூர்வமான கருத்தாடல் நடைபெற்றது.

(நி-6-285)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 547





இருபுறமும் தாழம் புதர்கள் அடர்ந்திருந்த ஓடைக் காலின் வழியாகப் படகு போய்க் கொண்டிருந்தது. பொன்னிறத் தாழம் பூக்களும், தந்த வர்ண வெண் தாழம்பூக்களும் இருபக்கமும் செறிந்து கிடந்தன. அவற்றின் நறுமணம் போதையை உண்டாக்கிற்று.

சில இடங்களில் ஓடைக் கரையில் புன்னை மரங்கள் வளர்ந்திருந்தன. சில இடங்களில் கடம்ப மரங்களும் இருந்தன. முத்துநிறப் புன்னை மலர்களும், குங்கும வர்ணக் கடம்ப மலர்களும் ஓடைக் கரைகளில் சொரிந்து கிடந்தன.

பூலோகத்திலிருந்து புண்ணியசாலிகள் சொர்க்கத்திற்குப் போகும் பாதை ஒன்று இருந்தால், அது இப்படித்தான் இருக்கும் என்று பூங்குழலிக்குத் தோன்றியது. இடையிடையே கிராமம் தென்பட்ட இடத்தில் சேந்தன் அமுதன் சென்று இளவரசருக்குப் பாலும், பூங்குழலிக்கு உணவும் வாங்கிக் கொண்டு வந்தான்.

இளவரசர் கண்விழித்த போதெல்லாம் பூங்குழலி சற்று விலகி நின்றாள். நேருக்கு நேர் அவரைப் பார்க்க முடியாமல் அங்குமிங்கும் பார்த்தாள்.

அவர் உணர்விழந்திருந்த நேரங்களில் அவர் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். சேந்தனுடன் பல விடயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டுமிருந்தாள். சில சமயம் இரண்டு பேரும் சேர்ந்து பாடிக்களித்தார்கள்.

சேந்தன் அமுதன் உணவு தேடிக் கிராமங்களுக்குச் சென்ற சமயங்களில் பூங்குழலி இளவரசரின் நெற்றியைத் தடவிக் கொடுத்தும், தலையைக் கோதிவிட்டும் பணிவிடை செய்தாள்.

அப்போதெல்லாம் அவள் உள்ளம் பொங்கி, உடல் சிலிர்த்து பரவச நிலையிலிருந்தாள். இம்மாதிரி அவள் எத்தனை எத்தனையோ பூர்வ ஜென்மங்களில் அவருக்குப் பணிவிடை செய்தது போன்ற உணர்வு தோன்றியது.

உருவமில்லாத ஆயிரமாயிரம் நினைவுகள் இறகுகளைச் சடசடவென்று அடித்துக் கொண்டு அவளுடைய உள்ளத்தில் கும்பல் கும்பலாகப் புகுந்து வெளியேறிக் கொண்டிருந்தன.

ஒரு பகலும் ஓர் இரவும் அவர்கள் அந்த ஓடைக்கால் வழியாகப் படகில் சென்றார்கள். பூங்குழலியும், சேந்தனும் முறை போட்டுக் கொண்டு அவ்வப்போது சிறிது நேரம் கண்ணயர்ந்தார்கள். கண்ணயர்ந்த நேரத்தில் உருவந் தெரியாத இன்பக் கனவுகள் பலவற்றைப் பூங்குழலி கண்டாள்.

மறுநாள் சூரியோதய நேரத்தில் உலகமே பொன்னிறமாக ஜொலித்த வேளையில், படகு நாகைப்பட்டினத்தை அடைந்தது. நாகைப்பட்டினத்தின் அருகில் அந்த ஓடையிலிருந்து ஒரு கிளை பிரிந்து சூடாமணி விஹாரத்திற்கே நேராகச் சென்றது. அந்தக் கிளை வழியில் படகைக் கொண்டு போனார்கள். புத்த விஹாரத்தின் பின்புறத்தில் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

அச்சமயம் அந்தப் புகழ் பெற்ற சூடாமணி விஹாரத்தில் ஏதோ குழப்பம் நேர்ந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. விஹாரத்தின் வாசலில் ஜனக்கூட்டத்தின் இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. பிக்குக்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள்.

படகிலிருந்து மூவரும் கரையில் இறங்கினார்கள். சேந்தன் அமுதன் தான் விஹாரத்துக்குச் சென்று, குழப்பத்தின் காரணம் என்னவென்று தெரிந்து வருவதாகச் சொல்லிவிட்டுப் போனான்.

### பத்தாம் அத்தியாயம்
### சூடாமணி விஹாரம்

பூம்புகார் என்னும் காவிரிப் பட்டினத்தைக் கடல் கொள்ளை கொண்டு போய் விட்டது அல்லவா? அதற்குப் பிறகு சோழ வளநாட்டின் முக்கியத் துறைமுகப் பட்டினம் என்ற அந்தஸ்தை நாகைப்பட்டினம் நாளடைவில் அடைந்தது.

பொன்னி நதி பாய்ந்த இயற்கை வளம் செறிந்திருந்த சோழ நாட்டுடன் வர்த்தகத் தொடர்பு கொள்ள எத்தனையோ அயல் நாட்டார் ஆவல் கொண்டிருந்தனர். பெரிய பெரிய மரக்கலங்களிலே வர்த்தகப் பண்டங்கள் வந்து இறங்கியபடி இருந்தன.

(தொடரும்...)





# சிறுவர் அரங்கம்

## வல்லவர் யார்?

(நேற்றைய தொடர்ச்சி...)

ஆகவே அவை மறைத்த இடங்களை சூரியக் கதிர்கள் சென்றடைய முடியவில்லை. சூரியனாக இருந்த சிற்பி, தன் மிக உக்கிரமான கதிர்களை அந்த மேகங்கள் மேல் செலுத்திப் பார்த்தான். அந்தக் கருமேகக் கூட்டங்கள் அசைவதாக இல்லை. "என்ன இந்த மேகக் கூட்டங்கள் சூரியனின் சக்திமிக்க கதிர்களையே மறைக்கும் வல்லமை படைத்தவையாக இருக்கின்றனவே என்று நினைத்தவுடன் அவன் அந்தக் கருமேகங்களாக மாறிவிட்டான்.

சிறிது நேரம் மகிழ்ச்சியாக சூரியக் கதிர்களை மறைத்துக் கொண்டு ஆனந்தப் பட்டுக் கொண்டிருந்தான். அப்போது பலமாகக் காற்றடித்தது. அந்தக் காற்று மேகக் கூட்டங்களை இப்படியும் அப்படியுமாக அலைக்கழித்தது. சிற்பி எவ்வளவு முயன்றும் காற்றின் வேகத்திற்கு எதிராக எதையும் செய்ய முடியவில்லை.

"சூரியனின் கதிர்களை மறைக்கும் மேகத்தையே செலுத்தும் காற்று எவ்வளவு வல்லமை படைத்ததாக [illegible] நினைத்தான். அந்தக் கணமே அவன் காற்றாக மாறிவிட்டான்.

காற்று வடிவில் சிற்பி தென்றலாகவும், புயலாகவும் எண்ணப்படி மாறி மாறி உலகைக் கலக்கிக் கொண்டிருந்தான். மிகவும் வல்லமை படைத்தவனாகத் தன்னைப் பற்றி எண்ணி எண்ணி நினைத்த இடத்திற்கெல்லாம் சடுதியில் சென்று மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந் தான். அவன் ஒரு முறை அப்படிக் கடும் புயலாக மாறிச் சென்று கொண்டிருந்த வழியை மறித்துக் கொண்டு ஒரு நெடிதுயர்ந்த மலை நின்று கொண்டிருந்தது.

எவ்வளவோ உக்கிரமாக முட்டி மோதிப் பார்த்தும் கடும் புயலாய் வடிவெடுத்திருந்த சிற்பியால் அந்த மலையைக் கடந்து செல்ல முடியவில்லை. "அட இந்த மலைக்குக் கடும் புயலையும் மிஞ்சும் சக்தி இருப்பது முன்னமேயே நமக்குத் தெரியாமல் போய் விட்டதே!"

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம் வாழ்க்கைத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகள்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ரணில் விக்கிரமசிங்கவின் இராஜதந்திரத்தை கவனியுங்கள்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட கையோடு கட்டுப்பணத்தைச் செலுத்தி தன்னை ஒரு ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

அதிலும் கட்சி சாராத ஒரு பொது வேட்பாளர் போல தன்னை அடையாளப்படுத்தியது அவரின் இராஜதந்திரம் எனலாம்.

இவ்வாறு கட்சி சாராமல், ஒரு சுயேட்சை வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற ரணில் விக்கிரமசிங்க, பொதுஜன பெரமுனவுக்கு இக்கட்டான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், 2024 ஜூலை மாதம் 26ஆம் திகதி அன்று ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்கின்றது.

இவ்வாறு தேர்தல்கள் ஆணையம் அறிவித்த மறுநாள் அதாவது 2024 ஜூலை 27ஆம் திகதி ஜனாதிபதி செயலகம் ஊடகங்களில் ஓர் விளம்பரத்தைப் பிரசுரம் செய்கின்றது. அந்த விளம்பரம்;

**இப்பொழுது திருடர்களைப் பிடிக்கவும் முடியும். சிறையில் அடைக்கவும் முடியும்.**

என்பதாக அந்த விளம்பரம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

அதில் திருடர்களைப் பிடிப்பதற்கும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும் போதுமான சட்டக்கட்டமைப்பு இதுவரை நமக்கு இருந்ததில்லை. இருப்பினும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் இந்தச் சட்டக் கட்டமைப்பில் இருந்த தடைகளை நீக்கி, ஊழலை இல்லாதொழிக்கும் வகையில் பரந்த அதிகாரங்களைக் கொண்ட, அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய சட்டக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.

இதற்காக அதிகாரிகளுக்கு அதிகாரங்களை வழங்கும் "ஊழலுக்கு எதிரான தேசிய நிகழ்ச்சிநிரல்" இப்பொழுது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

வருங்காலங்களில் சொத்துக்களைப் பகிரங்கப்படுத்தாமல் இருப்பது, நிதி மோசடி, ஊழல் மற்றும் திருடப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் வழக்குத் தொடுக்கும் முறைகளை அமுலாக்கல் மற்றும் ஒழுங்கமைத்தல் மூலம் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்குவது கட்டாயமாக்கப்படும் என்றவாறு அந்த விளம்பரம் அமைந்துள்ளது.

**பின்னிணைப்பு: ஜனாதிபதி செயலகம்**

தெரிவிப்பது போல வடிவமைக்கப்பட்ட குறித்த விளம்பரம் எதை மையப்படுத்தியுள்ளதென் பதைப் புரிந்து கொள்வது அவ்வளவு கடினமன்று.

இவ்வாறு எடுத்த எடுப்பிலேயே ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பு இவ்வாறாக இருக்க, இப்போது பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் 92 பேர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆம், பெரமுனக் கட்சி ஜனாதிபதி வேட்பாளரை இன்னமும் தெரிவு செய்யாத நிலையில், அந்தக் கட்சியின் 92 எம்.பிக்கள் ரணிலுக்கு ஆதரவு எனும்போது அந்தக் கட்சியின் நிலைமை எப்படியாகும் என்பது புரிதற்குரியது.

இங்குதான் ரணில் விக்கிரமசிங்கவின் இராஜதந்திரம் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டும்.

## மருத்துவர் அர்ச்சுனா மீதான வழக்கு
### செப்ரெம்பர் 11ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(சாவகச்சேரி)

மருத்துவர் அர்ச்சுனா மீதான வழக்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா மீதான வழக்குகள் நேற்று புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் நீதிபதி அ.யூட்சன் தலைமையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மருத்துவர்களை தொலைபேசியில் அச்சுறுத்தியமை,பேசித் தொந்தரவு செய்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக மருத்துவர் அர்ச்சுனா மீது ஏனைய மருத்துவர்களால் தொடரப்பட்ட 5வழக்குகளே குறித்த தினத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தது.

இதன்போது மருத்துவர் அர்ச்சுனா சார்பாக சட்டத்தரணி ஸெலஸ்ரின் ஆஜராகியிருந்தார்.

மருத்துவர் அர்ச்சுனா ஊழல் - மோசடிகளை தடுக்கும் முகமாகவே கடமை நேரத்தில் மருத்துவர்கள் வெளியே செல்வதனைத் தடுத்திருந்தார் எனவும் - மருத்துவர்கள் கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றிவிட்டு பின்னர் மேலதிக நேரக் கடமை என்ற பெயரில் மக்களின் வரிப்பணத்தை சூறையாடுவதாகவும் அவர் தனது வாதத்தின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன்போது இரு தரப்பு விவாதங்களையும் கவனத்தில் எடுத்த நீதிபதி 5வழக்குகளையும் எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதிக்கு தவணையிட்டிருந்தார்.

அதேநேரம் மருத்துவர் அர்ச்சுனா சாவகச்சேரி வைத்தியசாலையில் வைத்து தனது தொலைபேசி மற்றும் பணத்தை பறித்தமைக்காக மருத்துவர்கள் மீது தொடுத்த வழக்கும் குறித்த தினத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,30,33)

## மாதாந்த எரிபொருள் விலை மாற்றம் இம்முறை இல்லை

(கொழும்பு)

மாதாந்த எரிபொருள் விலைத்திருத்தத்திற்கு அமைய, எரிபொருள் விலை மாற்றமின்றி தொடரும் என இலங்கை கனிய வள கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதன்படி, ஜூலை மாதத்தில் நிலவிய அதே விலையில், ஓகஸ்ட் மாதமும் எரிபொருள் விற்பனை செய்யப்படும் என இலங்கை கனிய வளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் 344 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் 379 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

இதேவேளை சுப்பர் டீசல் லீற்றர் 355 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படவுள்ளதுடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 202 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பால்மாவின் விலையை குறைக்க கலந்துரையாடல்

பால்மாவின் விலையைக் குறைப்பது தொடர்பில் பால்மா இறக்குமதியாளர்களுடன் அடுத்த சில தினங்களில் கலந்துரையாடல் நடத்தப்படும் என வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, பால்மாவின் விலையைக் குறைக்க எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், விலையைக் கணக்கிடுமாறும் நுகர்வோர் அதிகார சபைக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நுகர்வோருக்குத் தேவையான சலுகைகளை வழங்குவதற்கு இறக்குமதியாளர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் அமைச்சர் நளீன் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நாட்டில் பணவீக்கம் மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த மாதத்தில் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும்புள்ளிவிபரத்திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கடந்த ஜூன் மாதத்தில் 1.7 சத வீதமாக இருந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் இந்த மாதத்தில் 2.4 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உணவுப் பணவீக்கம், கடந்த ஜூன் மாதத்தில் 1.4 சதவீதமாகக் காணப்பட்ட நிலையில், ஜூலை மாதத்தில் 1.5 சதவீமாக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அதேநேரம், கடந்த ஜூன் மாதத்தில் 1.8 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம், ஜூலை மாதத்தில் 2.8 சதவீதமாக அதிகரித்துள்ளதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## லிட்ரோ சமையல் எரிவாயு விலை மாற்றப்படாது

லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையில் வரும் மாதத்தில் மாற்றம் ஏற்படுத்தப்படாது என அந்த நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 02 ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டிருந்தது.

அதன்படி, 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 100 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 3690 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது.

அத்துடன் 05 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டு புதிய விலை 1482 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வாகன விபத்து ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு - திருகோணமலை பிரதான வீதியின் கிரான் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வானொன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதி இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் கிரான் வைரவர் கோவில் வீதியைச் சேர்ந்த 63 வயதான மோட்டார் சைக்கிள் ஓட்டுனரே உயிரிழந்துள்ளார்.

சடலம்வாழைச்சேனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நடமாடும் குடிநீர் விநியோகம் வேண்டும்

## மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)

கிளிநொச்சி அக்கராயன் குடிநீர்த் திட்டம் கடந்த மூன்று மாதங்களாக செயல் இழந்து உள்ளமையால் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர்.

அக்கராயன் மகா வித்தியாலயத் திற்கு முன்பாக உள்ள நீர்த்தாங்கியில் இருந்து அக்கராயன் மத்தி, மேற்கு, கெங்காதரன் குடியிருப்பு ஆகிய பகுதி களுக்கு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக குடிநீர் இடைநிறுத்தப்பட்ட நிலையில் குடி நீரினை இழந்துள்ள 270 இற்கு மேற் பட்ட குடும்பங்களுக்கு குடிநீரினை வழங்குமாறு தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையிலும் குடிநீர் செயற்றிட்டம் செயற்படாமலே உள்ளது.

இக்குடிநீர்த் திட்டம் தொடங்கு வதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட தரப்புக்கள் தற்போதைய நெருக்கடி யினை கருத்திற்கொண்டு நடமாடும் நீர்த்தாங்கிகள் மூலம் குடிநீரினை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி-6-350)

# ஜனாதிபதிக்கு எதிராக முறைப்பாடு

(கொழும்பு)

அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்தியமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு கோரி நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரை யாடல் தொடர்பில் புதிய சுதந்திர முன்ன ணியின் தலைவரினால் இந்த முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த முறைப்பாட்டில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது. "சுயேட்சை ஜனாதி பதி வேட்பாளர் ரணில் விக்கிரம சிங்க, ஆளும்கட்சியின் எம்.பிக்களுக்கு ஜனாதி பதி செயலகத்திற்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர். எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் அவரது ஆதரவை கோரும் கூட்டம் ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

பரந்த விளம்பரம் வழங்குவதற்காக ஜனாதிபதியின் ஊடகப் பிரிவின் கலந்து ரையாடல் தொடர்பான படங்கள், காணொளி காட்சிகள் மற்றும் உத்தி யோகபூர்வ செய்திக் குறிப்புப் படிவங்கள் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை யாக போட்டியிடுவதாகக் கூறும் ரணில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.

1981 இன் 15 மற்றும் 2023 ஆம் ஆண்டின் தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் எண். 3 ஆகியவை இதன்போது கடைப்பிடிக் கப்படவில்லை." என தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1985 - இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 29<br>உயரம் : 188cm<br>தகைமை/தொழில்: HND Computer Science, Server Build Technician.<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14167 | பிறப்பு-1991 -இந்து<br>நட்சத் திரம்: மூலம்<br>கி.பா- 23 சூரி செவ் 12 இல்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்:. BBA,MBA Management Assistant.<br>எதிர்பார்ப்பு: நிரந்தர வேலை(Gov/Pvt)<br>தொ.இ: G/14352 |
| பிறப்பு:1995 -இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 34<br>உயரம் : 175cm<br>தகைமை/தொழில்- BSC , Software Engineer<br>எதிர்பார்ப் பு: அரச வேலை<br>தொ.இ: B/ 14175 | பிறப்பு-1994 -இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: - 38 1/2<br>உயரம் : 5'<br>தகைமை/தொழில்: Bsc,Msc Scientific Officer.<br>எதிர்பார்ப் பு: வெளிநாடு<br>தொ.இ: G/14353 |
| பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 59 3/4<br>உயரம் :5'10"<br>தகைமை/தொழில்: Bsc, Msc (P.H.I)<br>எதிர்பார்ப் பு: தொழில்<br>தொ.இ: B/14176 | பிறப்பு -1988 - இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:- 22 1/4 உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: Diploma in Teaching. Montersari<br>எதிர்பார்ப்பு:படித்தகுணமுள்ளவர்(விவாகரத் தானவர்)<br>தொ.இ: G/14354 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3184

### மதுஷா

வீட்ல நடக்கிற பிரச்சினைகளை சிரிச்சிக்கிட்டே பேசினால் அது தான் நீயா நானா



அதே பிரச்சினையை சீரியசாக பேசினால் அது தான் சொல்வதெல்லாம் உண்மை

### ராதிகா

அமைதிக்கான நோபல் பரிசை ஆயிரம் பேர் வாங்கலாம்




ஆனா பொறுமைக்கான நோபல் பரிசுன்னா அது பெண்களிடம் சேலைவிக்கிற சேல்ஸ்மேன் ஒருத்தருக்கே போகணும்

### விக்னேஷ்

சாப்டியானு கேட்டா சாப்டேன்னு சொன்னா அது தோழி ரொம்ப அக்கறை தான்னு சொன்னா அது காதலி



இப்ப அது ஒன்னு தான் குறைச்சல்னு சொன்னா அது பொண்டாட்டி

### சாருஜா




எல்லாருக்கும் பிடிச்ச மாதிரிவாழ முடியாது




யாருக்கும் பிடிக்கலன்னு சாகவும் முடியாது

### கிதுர்ஷன்



மனைவி : மிதவாதம்னா என்னங்க?
கணவன்: சண்டை வரும் போது நீ என்ன திட்றல்ல அது!
மனைவி : பயங்கரவாதம்னா..?
கணவன் : சண்டைல நீ என்ன அடிக்கிறது
மனைவி : அப்போ அகிம்சைனா?
கணவன் : அதையெல்லாம் சமாளிச்சி நான் அமைதியா இருக்கேன்ல அது

### அருண்

மன்னிப்பு
பல உதடுகள்
கேட்க மறுக்கின்றன..
சில இதயங்கள்
வழங்க மறுக்கின்றன..



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விபரீத...

வாய்மத்தியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆசீர்வாதம் தனஞ்சயன் (வயது-44) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

யாழ்.பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் உதவியாளராகக் கடமை புரிந்து வரும் அவர் ஏற்கெனவே இரண்டு தடவை தற்கொலைக்கு முயன்றதாகவும் மூன்றாம் முறை கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலைக்கு முயன்ற நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஸ்ரீ லங்கா...

டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## வவுனிக்குளத்...

பகுதியினைச் சேர்ந்த 27 வயதுடைய ஆனந்தராசா ஜீவன் என்ற இளைஞன் நேற்று முன்தினம் வவுனிக்குளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

கடந்த 29ஆம் திகதி இரவு சுமார் இருபது இலட்சம் ரூபாய் பணத்துடன் யோகபுரத்தில் இருந்து பாண்டியன் குளம் சென்ற குறித்த இளைஞனை காணவில்லை என உறவுகள் தேடிய நிலையில் நேற்று முன்தினம் அதிகாலை வவுனிக்குளம் குளத்தில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வருகைதந்து சடலத்தை பார்வையிட்ட முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி எஸ்.ஏச்.மக்ரூஸ் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் உறவுகளிடம் ஒப்படைக்குமாறு தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெற்றது. உடற்கூற்றுப் பரிசோதனையின் முடிவில் குறித்த இளைஞன் கழுத்து நெரித்து கொல்லப்பட்டுள்ளதாக சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் நட்டாங்கண்டல் பொலிஸார் மேலதிக விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## யாழ்ப்பாணத்தில்...

பாய் பகுதிகளில் பொருத்தப்பட்ட சிசிடிவி கண்காணிப்பு கமராக்களில் இருந்தே காணொளிகளைப் பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

குறித்த காணொளிகளில் துவிச்சக்கரவண்டிகளில் முகங்களை மறைத்தவாறு சில நபர்கள் நடமாடுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர்கள் தொடர்பாகத் தகவல் தெரிந்தவர்கள் யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திலோ அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திலோ தகவலளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7,33)

## ஓய்வுநிலை...

நிலை அதிபர் ஒருவர் நேற்றைய தினம் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மயிலங்காடு வீதி புன்னாலைக் கட்டுவன் தெற்குப் பகுதியைச் சேர்ந்த வேலாயுதர் பாலசுப்பிரமணியம் (வயது -68) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மனைவியைப் பிரிந்து கடந்த 10 ஆண்டுகள் தனியாக வசித்து வந்துள்ளார். அவரது பிள்ளைகள் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர்.

குறித்த வீட்டில் வாடகைக்குக் குடியிருந்து விட்டு வீட்டை விட்டு சென்றவர்கள் தமது பொருட்களை எடுப்பதற்கு வீட்டுக்கு வந்த வேளை குறித்த நபர் வீட்டினுள் சடலமாக காணப்பட்டார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

சடலமானது மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சுதந்திரமான...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு உரிய பணிகளை முன்னெடுப்பதற்கு பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதால் பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்காமல் இருப்பது தேர்தல் பணிகளுக்கு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

எவ்வாறாயினும் தேர்தல் பணிகளுக்கு உரிய கட்டளைகளை அல்லது அறிவிப்புக்களை விடுக்கும்போது அதிகாரம் பொலிஸ்மா அதிபர் அல்லது பதில் பொலிஸ்மா அதிபரிடம் காணப்படுவதால் உரிய பதவி வெற்றிடமாகக் கூடாது என்பது முக்கியமானது.

வாக்குச்சீட்டு உட்பட தேர்தல் பணிகளுக்காகப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதால் அரச அச்சகத்திணைக் களத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

அரச அச்சகத் திணைக் களத்துக்கு தேவையான நிதியை விடுவிக்குமாறு திறைசேரிக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

தேர்தல் பணிகள் குறித்து எதிர்வரும் சனிக்கிழமை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளோம். தேர்தல் பணிகள் சட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்படுகின்றன.

பொலிஸ் அதிபர் விவகாரம் குறித்து ஜனாதிபதி அண்மையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டிய முறைமை குறித்து நாட்டுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார். இவ்விடயத்தில் ஆணைக்குழு தலையிட முடியாது.

அரசியலமைப்பின் 33(4) பிரிவில் சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தலை நடத்தும் சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு காணப்படுகிறது. வேட்பாளர் என்ற காரணத்தால் அவரால் அந்தப் பொறுப்பில் இருந்து விலக முடியாது என்றார். (ம-7)

## பொருளாதாரம்...

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "நாட்டில் பொலிஸ்மா அதிபர் விவகாரம் முக்கிய பேசு பொருளாக மாறியுள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி பிரதமர் பாராளுமன்றில் கருத்துரைக்கின்றார்.

அதனை பாராளுமன்றத்திற்கு வெளியே கூறுவாராயின் அவர் கைது செய்யப்பட வேண்டும்.

சபாநாயகரும் உயர்நீதிமன்றமும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க் கூறுகிறார்.

பொலிஸாரை பயன்படுத்தி அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முனைகின்றார். அதற்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அவருக்கு மிகவும் தேவையாகவுள்ளது" இவ்வாறு அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 5551 — J 4 8 4 7 4 9
அத சம்பத — J 4 7 4 9 — சீட்டிழுப்பு இலக்கம் 126 — தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய — திகதி - 2024.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் - 1581 — V 22 27 36 59 V — 01353

மெகா பவர் — திகதி 31/07/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1899 — J 23 20 35 68 72 — 88280

லக்கி 7 VIP — திகதி 2024.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 0377 — K 3 4 0 1 7 3 K

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3793 — சீட்டிழுப்பு திகதி 31.07.2024 — T 02 23 59 64 — T 08981

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.07.31 — சீட்டிழுப்பு இலக்கம் 0860 — விருச்சிகம் 01 08 13 25 விருச்சிகம் — 07476 — 14

உத்தியோகபூர்வ முடிவுகள் — 31.07.2024 — வெற்றி வாரம் 259 — வர்ணம் பச்சை — Z 4 2 4 9 2 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,695,396.00 — 28514 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2525 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 31.07.2024 — தினம் புதன்கிழமை — 11 13 17 26 Y — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 101,947,092.80 — DLB

சனிதா — திகதி 2024.07.31 — வெற்றி வாரம் 4686 — 08 41 63 68 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.66,943,292.00 — 54003 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4237 — வர்ணம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 2024.07.31 — தினம் புதன்கிழமை — 39 44 54 55 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,687,919.60 — 138170 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — I 35 03 13 27 62 — 1701 — 31.07.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 536,301,297.80 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.07.31 — வெற்றி வாரம் 2047 — வர்ணம் மஞ்சள் — 13 19 37 44 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,649,518.00 — DLB

ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2351 — சீட்டிழுப்பு திகதி 2024.07.31 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,995,619.20 — 09 12 39 60 U — 420218 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் வெற்றிடம்
யாழ்ப்பாணம்

- கணக்காளர் (பெண்கள்) - ( HNDA/ கணனி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்கள்)
- விற்பனையாளர்கள் (பெண்கள்) - கணனி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்கஸ்)
- சாரதிகள் (AD) – 50 வயதிற்கு மேற்பட்டவர்கள்
  - EPF/ ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
  - நிரந்தர தொழில்.

❖ சுய விபரக் கோவையை நேரில் வருகை தந்து சமர்ப்பிக்கவும்.

ESS JEY ELECTRICALS, NO.09,
STANLEY ROAD, JAFFNA
TELE - 021 222 2564, 021 222 7430
(1596)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0899)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலையாட்கள் தேவை

களஞ்சிய இருப்புகள் மற்றும் கணக்குகள் சரிபார்க்க கணனி அறிவுள்ள A/L படித்த பெண்கள் தேவை.

குறிப்பு : கோண்டாவில், கோப்பாய், திருநெல்வேலி அண்மித்த பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :

077 009 0189
(1595)

## கனடாவில் உயர்கல்வி

குறைந்த கட்டணத்தில்
இலகுவாக செல்லக்கூடிய நேர்வழி

STUDY IN UK

ஆங்கில பயிற்சியுடன் கூடிய வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு

*IELTS Lifeskills A1 (UK Spouse Visa exam)
*Dutch(டச்) - Netherland/Holand - Classes
*IELTS Academic & General / IELTS UKVI
வகுப்புகள் நடைபெறுகின்றன. (1585)

WEC COLLEGE
புதிய உயர்கல்லூரி வளாகம்
ஆரியகுளம்,யாழ்ப்பாணம்
0779265447 / 0217200989
கிளைகள் –
சாவகச்சேரி/வவுனியா/புதுக்குடியிருப்பு


## மீளாத்துயிலில் ஓராண்டு

அமரர் நடராசா
சுந்தரேஸ்வரி



எமைத் தாங்கிய மனிதத்தினை
நாம் தாங்கும் கடமையை சித்திர குப்தன்
அவன் தவிர்த்து எழுதியிருந்த நாளிலிருந்து
பூமிப்பந்து ஆதவனை ஓர் தடவை சுழன்றுள்ள
வேளையிலும் சுழலப்போகும் தடவைகளிலும்
உங்கள் நினைவுத் தடம் இருக்கும்.

நீங்கா நினைவுகளுடன் :
குடும்பத்தினர் (209)


## வாடகைக்கு உண்டு

யாழ். ஸ்ரான்லி வீதியில்
1ம், 2ம் மாடிகள்
(அலுவலகங்களுக்கு ஏற்ற)
சகல வசதிகளுடன்
வாடகைக்கு உண்டு. (C-897)

076 315 6470

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான
விசாவினை உறுதிப்படுத்திக்
கொள்ள குறைந்த கட்டணத்தில்
வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684
(214)

## விற்பனை உதவியாளர் தேவை (பெண்கள்)

நல்லூரில் உள்ள குழந்தைகளுக்கான விற்பனை நிலையம் ஒன்றிற்கு விற்பனை உதவியாளர் பெண்கள் வேலைக்குத் தேவை.
Note:- யாழ்.மாநகர எல்லைக்குள் வசிப்பவர்கள் மற்றும் கணினி அறிவுள்ளவர்கள் விரும்பத்தக்கது. (C-0901)

077 469 6695

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0898)


## கண்ணீர் அஞ்சலி

மலர்வு
05.05.1980



உதிர்வு
31.07.2024

யாழ். பல்கலைக்கழக தாவரவியல் துறையில் கடமையாற்றிய

### ஆசீர்வாதம் தனஞ்சயன்

(ஆய்வுகூட உதவியாளர் - யாழ். பல்கலைக்கழகம்)

அவர்கள் 31.07.2024 நேற்று இறைபதம் அடைந்தார். அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.08.2024 இன்று வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நவிண்டில், கரணவாய் மத்தி, கரவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

பிரிவால் துயருறும்...
தாவரவியல் சமூகம், தாவரவியல் துறை,
யாழ். பல்கலைக்கழகம். (1593)


அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0898)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர்
யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு
சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய்
நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

(C-0898)
CIMS College
49A, Chapel Street,Jaffna.
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### நிறுவுனர் தினம்

01.08.1816

208வது ஆண்டை நிறைவு கண்ட
மத்திய அன்னையைப் போற்றுவோம்

இருநூற்று ஒன்பதாம் ஆண்டில் இன்று
ஏற்றமுடன் கால்பதிக்கும் எமது கல்லூரி
ஒரு பெரிய தமிழர் தம் கல்விக்காக
உவப்போடு வடக்கில் முதலில் தோன்றி
கருந்தனமாம் கல்வியொடு கலைகள் மேவ
களிப்போடு விளையாட்டும் செழித்து வீச
திருபெருகு சேவையதால் திக்கு எல்லாம்
தேசுறவே மத்தியன்னை வாழி! வாழி!!

'மத்தியின் மணிக்கொடி நித்தியம் நிலைக்கும்'

பழைய மாணவர் சங்கம் (PPA)
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.